பாடம் 13 யாக்கோபு வீடு திரும்புதல் ஆதி 31 – 33 வரை

நீங்கள் எப்போதாவது உண்மையாகவே பயந்திருக்கிறீர்களா?

நீங்கள் அப்பபடிப்பட்ட அனுபவத்தை கடந்து வந்திருந்தால் யாக்கோபின் உணர்வை இந்த பாடத்திலே புரிந்து கொள்ள முடியும்.கடந்த பாடம் யாக்கோபு,லாபானின் வீட்டிலிருந்து தப்பி அவன் சொந்த ஊரான கானான் தேசத்திற்கு திரும்ப வருவதில் முடிந்தது. லாபான் என்ன பதிலளிப்பான் மற்றும் என்ன செய்வான் என்பது யாக்கோபிற்கு தெரியாது. அவனுக்கு தெரிந்ததெல்லாம் தேவன் அவனை லாபானை விட்டு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானான் தேசத்திற்கு திரும்ப போக சொன்னது மட்டுமே.

யாக்கோபு அவன் மனைவி மற்றும் பிள்ளைகளோடு போனது மூன்றாம் நாளிலே லாபானுக்கு அறிவிக்கப்பட்டது. அப்போழுது அவன் தன் வீட்டிலுள்ளவர்களையெல்லாம் கூட்டிக்கொண்டு,யாக்கோபை கண்டுபிடிக்க சென்றான். யாக்கோபை தொடர்ந்து போய் அவனை கண்டுபிடிக்க லாபானுக்கு ஏழு நாட்கள் எடுத்து கொள்ளும். லாபான்,யாக்கோபை சந்திக்கும் நாளின் முன் இரவிலே தேவன் லாபானின் சொப்பனத்திலே தோன்றி “நீ யாக்கோபோடே நன்மையே அன்றித் தீமை ஒன்றும் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிரு” என்று கட்டளையிட்டார்.

மறுநாள் லாபான்,யாக்கோபை கண்டுபிடித்து “நீ ஏன் என்னை ஏமாற்றினாய்? நீ திருட்டளவாய் இரவிலே புறப்பட்டு, என் குமாரத்திகளையும், பேரப்பிள்ளைகளையும் யுத்தத்திலே பிடித்த கைதிகளைப்போல கொண்டு வந்தது என்ன செய்கை? நீ போகிறேன் என்று சொல்லியிருந்தால், நான் உன்னை சங்கீதம், மேளதாளம்,கின்னரமுழக்கத்துடனே அனுப்புவேனே.

நீ என்னை அவமானப்படுத்தியதால்,உங்களுக்கு இங்கேயே என்னால் பொல்லாப்பு செய்ய முடியும். ஆகிலும் கடந்த இரவு, உங்கள் தகப்பனுடைய தேவன், உனக்கு தீமை செய்ய கூடாது என்று என்னிடம் கூறினார். உன் தகப்பன் வீட்டின்மேலுள்ள வாஞ்சையினால், உன் தேசத்திற்கு போகிறாய் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் ஏன், என் தெய்வங்களை திருடிக்கொண்டு போகிறாய்? என்று கடிந்து கொண்டான்.

அந்த நாட்களிலிலே வழக்கமாக மூத்த மகனே தன் குடும்ப தெய்வங்களின் சுருபங்களை வைத்திருப்பார். அவன் அவைகளை வைத்திருப்பதினால் அவனுக்கு சொத்திலே இரண்டுமடங்கு சுதந்திரம் கொடுக்கப்படுகிறது. லாபான், யாக்கோபின் சம்பளத்தை அடிக்கடி மாற்றி வந்ததால் அவைகளை பெற்றுக்கொள்ள யாக்கோபு தகுதியானவன் என ராகேல் நினைத்தாள்.

எனவே அவள் அந்த சுருபங்களை எடுத்து அவைகளை வணங்குவதற்காக அப்படி செய்யாமல், தன் தகப்பனுடைய சுதந்திரத்தை யாக்கோபு பெற்றுக் கொள்ளும்படி அவைகளை ஒட்டகசேணத்தின் கீழ் மறைத்து வைத்தாள்.

ஆனால், ராகேல் அந்த சுருபங்களை எடுத்துக்கொண்டு வந்தது யாக்கோபிற்கு தெரியாது. எனவே அவன் லாபானிடம் “நான் உம்முடைய சுருபங்களை திருடவில்லை. நீங்களே சென்று எங்களுடைய கூடாரங்களில் போய் தேடி பாருங்கள். யாரிடத்தில் அவைகளை கண்டுபிடிக்கிறீர்களோ, அவனை நான் கொன்று போடுவேன்” என்றான். பாவம் யாக்கோபு, அவனது அன்புக்குரிய ராகேலும் அவனை ஏமாற்றியதை அறியாதிருந்தான்.

லாபான் யாக்கோபின் கூடாரத்திலும்,லேயாள் கூடாரத்திலும் மற்றும் இரண்டு வேலைக்காரிகளின் கூடாரத்திலும் தேடிப் பார்த்தான். அவன் ராகேலின் கூடாரத்தில் பிரவேசித்தபோது, அவள் சுருபங்களை ஒளித்து வைத்திருந்த ஒட்டக சேணத்தின் மேல் உட்கார்ந்திருந்தாள்.

அவள் அவனை நோக்கி, “தகப்பனே உமக்கு முன்பாக நான் எழுந்திராததைக் குறித்து கோபம் கொள்ள வேண்டாம். ஸ்திரீகளுக்குள்ள வழிபாடு எனக்கு உண்டாயிருக்கிறது’’ என்றாள். அப்படியே அவன் அவள் கூடாரத்திலே அந்த சுருபங்களைத் தேடியும் கண்டுபிடிக்கவில்லை.

அந்த சமயத்தில் யாக்கோபு மிகவும் கோபம் கொண்டு “நீர் என்னை குற்றவாளியைப் போல் தொடர்ந்து வந்தது என்ன? எனக்கு உண்டான யாவற்றையும் தேடி பார்த்தீரே,உம்முடைய பொருட்களில் எதையாகிலும் கண்டுபிடித்தீரோ? இல்லை, நீர் எதையும் கண்டுபிடிக்கவில்லை. நான் பகலின் உஷ்ணத்தையும்,இரவின் பனியையும் பொறுத்துக் கொண்டேன். நீர் செழிக்க நான் வேலை செய்தேன்.

நான் பாடுகளை பொறுத்தேன். ஆனாலும் நீர் என்னை நன்றாக நடத்தவில்லை. ஏதாகிலும் தவறு நேரும்போது அதையும் என் கையில் கேட்டு வாங்கினீர். ஒரு கொடிய மிருகம், செம்மறி ஆட்டை கொன்றாலும் நான் தான் அதற்கு பதில் செலுத்த வைத்தீர்.

இப்போழுது தேவன் என்னை உம்மிடமிருந்து பாதுகாக்கின்றார்” என்றான். அதற்கு லாபான்,”நீ காண்கிற யாவும் என்னுடையவைகள், இந்த குமாரத்திகளும்,பிள்ளைகளும் மந்தைகளும் என்னுடையவர்கள். நான் என்ன செய்யக்கூடும்? இப்பொழுது எனக்கும் உனக்கும் சாட்சியிருக்கும் பொருட்டு நீயும் நானும் எல்லோருக்கும் முன்பாக உடன்படிக்கை பண்ணிக் கொள்வோம்” என்று குறைபட்டுக் கொண்டான்.

எனவே அவர்கள் இந்த எல்லைகளை கடந்து வராதபடிக்கு மனிதர்கள் சில கற்களை எடுத்து குவியலாக குவித்தார்கள். அந்த உடன்படிக்கையை இருவரும் ஏற்றுக்கொண்டார்கள். அதற்கு லாபான் “நீ என் குமாரத்திகளை துன்பப்படுத்தி வேறே ஸ்திரீகளை விவாகம் பண்ணாதபடிக்கு இந்த கற்குவியல்கள் நமக்கு சாட்சியாய் இருக்கும்”. என்றான். பின்பு யாக்கோபு தேவனுக்கு பலியிட்டு அவர்கள் அனைவரும் போஜனம் பண்ண அமர்ந்தார்கள். லாபான் அதிகாலமே தன் குமாரத்திகளையும், பிள்ளைகளையும் ஆசிர்வதித்து தன் இடத்திற்கு திரும்பி போனான்.

யாக்கோபு தன் குடும்பத்தோடு பிரயாணம் பண்ணுகையில்,தூதர்கள் அவனை சந்தித்தார்கள். அவன் தான் தனியாக இல்லை என்பதை உணர்ந்து கொண்டான். எனவே அந்த இடத்திற்கு ‘‘இது தேவனுடைய சேனை’’ என்று பெயரிட்டான். தேவன் தனது வாக்குதத்தத்தின்படியே,தனக்கு உதவி செய்ய இருக்கிறார் என்பதை அவன் உணர்ந்தான். பிறகு அவன்,”நான் எனக்கு உண்டான யாவற்றோடும் உம்மண்டைக்கு வருகிறேன்,என்னை ஏற்றுக் கொள்வீர் என்று நம்புகிறேன்” என்று தன் சகோதரனாகிய ஏசாவிடம் சொல்லும்படி தூதரை அனுப்பினான். அவர்கள் திரும்பி வந்து,”ஏசா நானூறு பேரோடே வந்து கொண்டிருக்கிறார்’’ என்று அறிவித்தார்கள்.

யாக்கோபின் உள்ளம் பயத்தினால் நிறைந்தது. இது அவனுடைய ஏமாற்று வேலைக்கான வெகுமதிகளை அறுவடை செய்ய வேண்டிய நேரம் போல் தெரிந்தது. எனவே யாக்கோபு தன்னிடத்திலுள்ள ஜனங்களையும்,ஆடுமாடுகளையும் இரண்டு பகுதியாக பிரித்து,’’ஏசா ஒரு பகுதியின் மேல் விழுந்து அதை முறிய அடித்தாலும், மற்ற பகுதி தப்பித்து கொள்ளும்’’ என்றான்.

முடிவாக நம்பிக்கையற்ற நிலையில் அவன் ஜெபிக்க தீர்மானித்தான், “என் தகப்பனாகிய ஆபிரகாம் மற்றும் ஈசாக்கின் தேவனே, உன் தேசத்திற்கு திரும்பிபோ என்று நீர் தான் சொன்னீர். நான் இங்கே செழிப்பேன் என்றீர். தேவரீர் காண்பித்த எல்லா தயவுக்கும் நான் பாத்திரன் அல்ல. நான் கோலும், கையுமாய் இந்த இடத்தை கடந்து போனேன். இப்போழுது இரண்டு பரிவாரங்களையும் உடையவனானேன். உம்முடைய வாக்குத்தத்தத்தை தயவாய் நினைவு கூர்ந்து என் சகோதரனிடமிருந்து என்னை தப்புவியும். உன் சந்ததியை எண்ணி முடியாத கடற்கரை மணலைப் போல் மிகவும் பெருகப் பண்ணுவேன் என்று சொன்னீரே”என்று ஜெபித்தான்.

பின் தன் சகோதரனுக்கு வெகுமானமாக கால்நடைகள்,ஆடுகள்,கழுதைகள் மற்றும் ஒட்டகங்கள் என ஐநூறுக்கும் மேலான விலங்குகளை தெரிந்தெடுத்தான். அவைகளை மூன்று பிரிவாக பிரித்து தனக்கு முன்பாக அனுப்பினான். அவன் தன் வேலைக்காரரிடம்,’’ஏசா

முதலாவது பிரிவிற்கு எதிர்பட்டு வரும்போது உமது அடியானாகிய யாக்கோபு இவைகளை உங்களுக்கு அனுப்பினார் என்று சொல்லுங்கள்'' என கூறினான். இப்படியே இரண்டாம், மூன்றாம் பிரிவுகளையும் குறித்து சொன்னான்.

அந்த இரவு தன் குடும்பத்தையும் மற்றும் தனக்கு உண்டான யாவற்றையும் ஆற்றுக்கு அக்கரைக்கு அனுப்பினான். அவன் பிந்தி தனித்திருந்து, தூங்க முயற்சி செய்தான். யாருமில்லாத இடத்திலே ஒரு மனிதன் அவனை பிடித்தார். யாக்கோபு அவருடனே போராடினான். இருவருக்கும் இடையேயான போராட்டம் இரவு முழுவதும் தொடர்ந்தது. பொழுது விடிந்த போதும் யாக்கோபு தன் போராட்டத்தில் உறுதியாய் இருப்பதை அந்த மனிதரை கண்டான்.

தீர்க்கதரிசி ஓசியா பின்வருமாறு எழுதுகிறார்,''யாக்கோபு தூதனானவரோடே போராடி மேற்கொணடான்''. யேகோவா என்பது அவருடைய நாம சங்கீர்த்தனம்''(ஓசியா 12.4) என்கிறார் .எனவே யாக்கோபு இரா முழுவதும் போராடியும் மனித ரூபத்தில் வந்த தேவதூதன், அவனை மேற்கொள்ள முடியாததை கண்டு அவனுடைய தொடைச்சந்தை தொட்டதினால் அது சுளுக்கிற்று. பின்பு அவர்,''என்னை போகவிடு, பொழுது விடிகிறது'' என்றார். அதற்கு யாக்கோபு,''நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மை போகவிடேன்'' என்று பதிலளித்தான். அவர்,''உன் பேர் என்ன?'' என்று கேட்டார். அவன்,''என் பெயர் யாக்கோபு''என்றான்.

''உன் பேர் இனி யாக்கோபு என்னப்படாமல் இஸ்ரவேல் எனப்படும்;தேவனோடும் ,மனிதரோடும் போராடி மேற்கொண்டாயே'' என்றார். வேதம் ஒரு மனிதனின் பெயர் மாற்றப்பட்டது என்று சொல்லும்போது அது அவனது குணாதிசியத்தின் மாற்றத்தை குறிப்பிடுகிறது அல்லது தேவனானுடனான உறவில் ஏற்படுகின்ற மாறுதலை குறிக்கிறது.

பின்னர் யாக்கோபு,''தயவு செய்து; உம்முடைய பெயரை எனக்கு தெரிவிக்க வேண்டும்'' என்று வருந்தி கேட்டான். அதற்கு அவர்,''நீ என் பெயரை கேட்பானேன்'' என்று சொல்லி அவனை ஆசீர்வதித்து சென்றார்.

அப்போழுது யாக்கோபு; நான் தேவனை முகமுகமாய் கண்டேன்,உயிர்தப்பிப் பிழைத்தேன் என்று சொல்லி அந்த ஸ்தலத்திற்கு பெனியேல் என்று பேரிட்டான்.

மறுநாள், ஏசாவை யாக்கோபு சந்தித்தபோது ஏசா எதிர்கொண்டு ஓடி வந்து அவனை தழுவிக்கொண்டான். இருவரும் அழுதார்கள் ஏசா, ''உன்னோடிருக்கிற இவர்கள் யார்? என்று கேட்டான். உடனே யாக்கோபு அவர்களை தன் குடும்பத்தினர் என்று சொல்லி ஏசாவிற்கு அறிமுகப்படுத்தினான். அப்போழுது ஏசா,''எனக்கு எதிர்கொண்டு வந்த இந்த

மந்தைகளெல்லாம் என்னத்திற்கு''? என்றான். அதற்கு அவன்,''என் ஆண்டவனுடைய கண்களில் எனக்கு தயவு கிடைப்பதற்கு'' என்றான்.

பின்னர் ஏசா,வெகுமதிகளையெல்லாம் ஏற்றுக்கொண்டு,தன்னோடு வந்த மனிதர்களோடு திரும்பிபோனான். யாக்கோபு சீகேம் என்னும் பட்டணத்திற்கு அருகில் குடியேறி,அங்கே ஒரு பலிபீடத்தை கட்டி, அதற்கு''இஸ்ரவேலின் தேவன் வல்லவர்'' என்று பேரிட்டான்.

இது தன்னைப் போன்ற ஏமாற்றுக்காரனையும் மாற்றக்கூடிய தேவனிடம் அவன் வைத்திருந்த விசுவாசத்தை நிருபிக்கிறது. இவ்வாறு அவன் புதிய பெயருடன்,புதிய மனிதனானான். ஆபிரகாம் மற்றும் ஈசாக்கின் தேவனே தன்னுடைய தேவன் என்பதை குறித்து சாட்சி பகிர்ந்ததோடல்லாமல் இதை தன்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையில் அனுபவரீதியால் அறிந்தும் கொண்டான்.

இந்த பாடம் மிகவும் முக்கியமானது ஏனென்றால் நம்முடைய சூழ்நிலைகள் எப்படிப்பட்டதாய் இருந்தாலும்,நாம் நம்மை தேவனுக்கும் அவருடைய வழிகளுக்கும் ஒப்புக்கொடுக்கும்போது அவர் நம்மை வழிநடத்தி நமக்கு தேவையானவற்றை அளிப்பார் என்பதை நமக்கு காட்டுகிறது.

இந்த பாடம் நமக்கு உணர்த்துகின்ற முக்கிய உண்மை ஏன்னவென்றால்,தன்னுடைய பிள்ளைகளின் போராட்டத்தின் மத்தியிலும்,தேவன் தன்னுடைய வாக்குதத்தத்திற்கு உண்மையுள்ளவராக இருப்பார். தேவன் தம் பிள்ளைகளின் விசுவாசத்திற்கு ஏற்ற பலனை அளிப்பார்.

இந்த பாடத்தை திரும்பி பார்த்து பின்வரும் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்.

ஏன் யாக்கோபு,லாபானின் வீட்டை விட்டு வெளியேறினான்? (6 வினாடிகள் நிற்கவும்) ''தேவன் அவனை லாபானை வீட்டு வெளியேறி,வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு செல் என்று கூறியதால்'' என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

லாபான்,எவற்றை தன் வீட்டிலிருந்து திருடியதாய் யாக்கோபின் மீது குற்றம் சுமத்தினான்? (6 வினாடிகள் நிற்கவும்) தன் குடும்ப தெய்வங்களின் சுருபங்களை என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

யாக்கோபு,தேவதூதனுடன் இராமுழுவதும் போராடிய பிறகு என்ன உணர்ந்து கொண்டான்?(6 வினாடிகள் நிற்கவும்)

நான் தேவனை முகமுகமாய் கண்டேன்,உயிர்தப்பிப் பிழைத்தேன் என்று யாக்கோபு கூறினான் என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

யாக்கோபு பலிபீடத்தை கட்டி அதற்கு ஒரு பெயரை வைத்ததினால் என்ன சிறப்பான உண்மையை கற்றுக்கொண்டான்?(6 வினாடிகள் நிற்கவும்)

இஸ்ரவேலின் தேவன் வல்லவர் என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்

இதில் உங்களுக்கான வீட்டுப்பாடம் என்னவென்றால், குறைந்தது மூன்று முறையாவது இந்தக் பாடத்தைக் கேளுங்கள். நீங்கள் இந்தக் பாடத்தை கேட்கும் போது இது எப்படி நடந்திருக்கும் என்று உங்கள் மனதில் கற்பனை செய்து பாருங்கள். நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ளக் கூடிய அளவிற்கு உங்கள் சொந்த வார்த்தையிலே திரும்ப சொல்லுங்கள். பாடத்தை திரும்ப திரும்ப கேட்டு சொல்லிப் பாருங்கள். நீங்கள் சரியாக சொல்லுகிறீர்கள் என்ற நம்பிக்கை உங்களுக்குள் வரும் வரைக்கும் சொல்லிப் பழகுங்கள். அதற்காக 45 நிமிடம் ஒதுக்கி கற்றுக் கொள்ளுங்கள்.

யாக்கோபின் வாழ்க்கையை (ஆதி27-30) பற்றி கடந்த பாடத்தில் சொல்லப்பட்டதை ஏற்கனவே தெரிந்து கொண்ட ஒருவருக்கு இந்த பாடத்தை பகிரவும். பாடத்தை சொல்லி முடித்த பின்பு,பலிபீடத்திற்கு "இஸ்ரவேலின் தேவன் வல்லவர் என்று பேரிட்ட பிறகு யாக்கோபு என்ன சாட்சியை அல்லது உண்மையினை சீகேமிலிருந்து மக்களுக்கு அறிவிக்கிறார்? என்ற கேள்வியை கேட்கவும். புதில் அவன் ஆபிரகாம் மற்றும் ஈசாக்கின் தேவனே தன்னுடைய தேவன் என்பதை சாட்சி பகிர்ந்தான் மற்றும் இதை தன்னுடைய தனிப்பட்ட அனுபவத்திலே தெரிந்தும் கொண்டான் என்பதே.

புாடம் முடிந்தது